எண் 208.

671

# திருவானைக்கா :
# திருப்பதிகங்கள்


சம்பந்தர்


அப்பர்


சுந்தரர்

621

தருமபுர ஆதீனம்

வெளியீடு எண் 208.

உ

குருபாதம்

# திருவானைக்கா : 621

# : திருப்பதிகங்கள்

இஃது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகளின்

திருவுள்ளத்தின்படி வெளியிடப்பெற்றது.

பிரதிகள் 300.

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்.
16—10—49.

 621

# முன்னுரை

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம் பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல் போல, இம் மாதத்திலும் 20—10—49 அன்று திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்ட நாயகி சமேத ஸ்ரீ ஜம்புகேசுவரர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய இவ்வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெறுகின்றது. அன்பர்கள் யாவரும் பாராயணஞ் செய்து ஜம்புகேசுவரர் திருவருளால் எல்லா நலன்களும் பெற்று உய்வார்களாக.

௳

குருபாதம்

# தலச்சிறப்பு

இது சோழநாட்டில் காவிரியின் வடகரையி லுள்ள 60-வது தலம். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றினாலும் பெருமையுடையது. இறைவன் யானைக்கருள்புரிந்தமையின் ஆனைக்கா எனவும், அம்பிகைக்கு ஞானோபதேசம் செய்தமையின் ஞானபூமி எனவும், வெண்ணாவல்மரத்தின் கீழ் இறைவன் வீற்றிருத்தலின் ஜம்புகேசுரம் என வும் பெயர் பெறும். பஞ்சபூதத் தலங்களுள் அப்புத்தலம். ஆறாதாரத்தலங்களுள் சுவாதிட் டானத்தலம். அம்பிகை நீரால் அமைத்த மூர்த்தியைக் கொண்ட கோயில். அப்பர் அடிகள் 'செழுநீர்த்திரள்' எனப் போற்றி யிருப்பது காண்க. சிலந்தியும் யானையும் பூசித்துப் பேறுபெற்றதலம்.

சுவாமிசந்நிதி மேற்கு முகமாகவும், அம்மன் சந்நிதி கிழக்குமுகமாகவும் அமைந்துள்ளன கோயிலைச் சூழ்ந்துள்ள மதில்களுள் நான்காவது மதில் மிகப் பெரியது. இது திருநீற்று மதில் என வழங்கப்பெறுகின்றது.

சுவாமி ஜம்புநாதர், வெண்ணாவலீசர், அப்புலிங்கம். அம்மை அகிலாண்டநாயகி. தீர்த்தங்கள் பிரம தீர்த்தம் முதலிய ஒன்பது தீர்த்தங்கள். வழிபட்டோர் பிரமன், திருமால், திக்குப்பாலகர், அஷ்டவசுக்கள், சம்புமுனி, அம்பிகை, சிலந்தி, யானை, இராமர், பராசர், சோழன், கோச்செங்கண்ணன் முதலியோர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, ஐயடிகள் காடவர்கோன், அருணகிரிநாதர் முதலியோரும் பூசித்துப் பேறுபெற்றவர்கள்.

அம்பிகை பூசித்த ஐதீகமாகத் தினம் உச்சிக் காலப் பூசையில் அம்மன்கோயில் அர்ச்சகர்

பெண்வேடம் பூண்டு சுவாமி கோயிலை வலம் வந்து பூசிப்பர். பிரம்மோற்சவம் ஆண்டுதோறும் மாசிமாதந் தொடங்கிப் பங்குனியோடு நாற்பதுநாள் நடைபெறுகிறது.

பஞ்சப் பிராகாரம் என்னுஞ் சிறந்த திருவிழாவைக் கொண்டது. பிறகோயில்களில் நிகழும் திருக்கல்யாண உற்சவம் இங்கு நடைபெறுவதில்லை. இங்கு 6ந் திருநாளே தேர்த்திருநாள்.

இராஜ ராஜேசுவரர் கோயில், நீலவிண்டேசுவரர் கோயில் (இராமரால் பிரதிட்டை செய்யப்பட்டது), சங்கரேசுவரர் கோயில், பிடாரி கோயில், வீரபத்திரசாமி கோயில், சுப்பிரமணியசுவாமி கோயில் முதலிய சுற்றுக் கோயில்கள் புறத்தேயுள்ளன.

சிற்ப வேலைப்பாட்டினாலும் இக்கோயில் சிறந்ததொன்று. சோமாஸ்கந்தர் மண்டபத்தி

னுள்ள கொடுங்கைகள் மரவேலைகளைப்போலப் பட்டைவைத்துச்செய்யப்பட்டுள்ளன. சுற்றுக் கோயிலான இராஜ ராஜேசுவரர் கோயிலில் மூலலிங்கம் பஞ்சமுக லிங்கம். அம்மன்சந்நிதியில் ஒருதூணில் திரிமூர்த்திகளின் வடிவமும், ஒரேபாதமும் அமைக்கப்பட்டு ஏகபாத திரிமூர்த்தி எனப் பெயர்வழங்கப்படுகிறது.

கோயிலுக்கு நிலங்கள் திருவாபரணங்கள் முதலியன தானம் செய்தவரலாறுகள் பல கல்வெட்டினால் தெரிய வருகின்றன.

இத் தலத்தின் பெருமையினைக் கூறும் **திருவானைக்கா புராணம்** ஒன்றுண்டு. சொற்சுவை பொருட்சுவையுடையது. அப் புராணத்திற் கூறியபடி யானை சிலந்தி இவற்றின் பூர்வ வரலாறு பின்வருமாறு:—

"கைலையங்கிரியிலுள்ள சிவகணநாதர்களுள் மாலியவான் புட்பதந்தன் என்ற இருவரும்

சிவபத்தியில் மேம்பட முற்பட்டுப் பகைபூண்டு ஒருவரை ஒருவர் சபித்துக்கொண்டனர். பின்னர், பெருமான் அருளால் ஞானதலமாகிய இத்தலத்தில் யானையும் சிலந்தியுமாகப் பிறக்கலாயினர். அச்சிலந்தியே மறுபிறப்பில் கோச்செங்கட் சோழன் என்பது"

பெரியபுராணத்துட் கூறியபடி கோச்செங்கட் சோழநாயனர் வரலாறு வருமாறு:—

சோழநாட்டில் காவிரிக்கரையில் சந்திர தீர்த்தம் என்று ஒன்றுண்டு. அதன் கரையிலிருந்த வெண்ணாவல் மரத்தடியில் ஒருசிவ லிங்கம் வெளிப்பட்டது. அதனை ஒரு வெள்ளானை கண்டது. நாடோறும் பூசித்து வந்தது. அங்கே ஞான உணர்வுடைய சிலந்தியுமிருந்தது. சிவலிங்கத்தின்மீது சருகு உதிராமல் தன் வாய்நூலால் மேற்கட்டி அமைத்தது. யானை அதனை அழித்தது. சிலந்தி கோபங்கொண்டு துதிக்கையினுள்

புகுந்து கடித்தது. யானையும் மாண்டது. சிலந்தியும் மாண்டது. சிவபெருமான் காட்சி தந்து யானைக்குச்சிவகதி வழங்கிச் சிலந்திக்குச் சோழர் குலத்தில் பிறக்க அருள் செய்தார்.

சோழ அரசர் சுபதேவர் மனைவி கமலவதி தில்லைக்கூத்தன் திருவருளால் கருவுற்றனள். கரு உயிர்க்கும் நேரம் வந்தது. 'ஒரு நாழிகை கழித்துப் பிறக்கின் இப்பிள்ளை மூவுலகும் ஆளும்' என்றனர் கணித நூலார். கமலவதி தன்னைத் தலைகீழாகக் கட்டச்சொல்லிக் குறித்த நேரத்தில் கருவுயிர்த்தனள். குழந்தை கண் சிவந்திருக்கக் கண்டு 'என்கோ செங்கண்ணனே' என்று சொல்லிக் கொண்டே இறந்தனள். சுபதேவர் அப்பிள்ளையை வளர்த்துத் தக்க வயதில் முடிசூட்டித் தாம் தவநெறி நின்று சிவகதி அடைந்தனர். கோச்செங்கட் சோழருக்கு முன்னை அறிவு முகிழ்த்திருந்தது. பல கோயில் எடுப்

பதில் கண்ணுங்கருத்துமா யிருந்தார். முற் பிறப்பில் அருள்பெற்ற திருவானைக்காவினை நாடிச்சென்று திருக்கோயில் அமைத்தனர். பூசைக்கு வேண்டிய நிபந்தங்களும் அமைத் தனர். பின்னர், தில்லையை அடைந்து அம்பலவாணன் அடிமலர் போற்றித் தில்லை வாழந்தணர்களுக்குத் திருமாளிகை கட்டிக் கொடுத்துத் திருத்தொண்டுகள் பல செய்து இறைவன் திருவடி நிழலில் இனிது வீற்றிருந் தனர்.

இத்தலம் மூவர் முதலிகளாலும் பாடப் பெற்றது. திருஞான சம்பந்தர் அருளிய பதிகம் மூன்றனுள் பண் இந்தளம் 'மழையார் மிடறு' என்னும் பதிகம் தலைவனைக்கண்டு காமுற்றுப் பிதற்றும் பெண்ணின் நிலைகண்டு செவிலித்தாய் இரங்கிக் கூறும் கூற்றாக அமைந்துள்ளது. இறைவன் வெண்ணாவலின் கீழ்வீற்றிருப்பதைப் பாசுரந்தோறும்போற்றி

யுள்ளனர். நான்காவது பாசுரத்தில் 'விறன் மிக்க கரிக்கருள் செய்தவனே' என யானைக் கருளியவரலாறும் 5வதுபாசுரத்தில் "செங்கட் பெயர் கொண்டவன் செம்பியர் கோனங்கட் கருணை பெரிதாயவனே" எனக்கோச்செங்கட் சோழர்க் கருளிய வரலாறும் கூறப்பட் டுள்ளன.

பண் கௌசிகம் "வானைக்காவி" என்னும் பதிகம் 7வது பாசுரத்தில் 'ஆரம் நீரோடேந் தினன்' என ஆரம் கொண்ட வரலாறும் 9வது பாசுரத்தில் 'ஊனொடுண்டல் நன்றென ஊனொடுண்டல் தீது என ஆனதொண்டர் அன்பினாற் பேசநின்ற தன்மையான்' எனத் திருக்கண்ணப்ப தேவரும் சிவகோசரியாரும் காளத்தியில் வழிபட்ட வரலாறும் கூறப்பட் டுள்ளன. திருப்பாசுரந்தோறும் தலத்தை 'ஆனைக்கா' என்றே போற்றியுள்ளனர்.

மூன்றாவதாகிய பண் 'மண்ணது வுண்டரி மலரோன் காணு' என்னும் பதிகம் முழுவதும் பாசுரந்தோறும் மாலயன் தேடிக் காணாமை போற்றப்பட்டுள்ளது. அன்றியும பாசுரந்தோறும் திருக்கயிலாயம், திருவானைக்கா, திருமகேந்திரம், திருவாரூர் என்னும் நான்கு தலங்களிலும் இறைவன் வீற்றிருந்தருள் செய்வதும் போற்றப்பெற்றுள்ளது. இதனைக் 'கூடற் சதுக்கம்' என்னும் தலைப்பினால் தேவார நூல்களில் அச்சிட்டபலரும் குறித்திருக்கின்றார்கள். 'கூடற்சதுக்கம்' என அணி நூலுட் கூறப்படுவதற்கு அங்கு இலக்கணம் வேறு. ஆராயத்தக்கது. விட்டுணு மூர்த்தியை அரி, மால், மதுசூதனன், கண்ணன், கடல்வண்ணன் என்னும் பெயர்களினால் கூறியிருப்பதோடு, சக்கரம் வேண்டுமால், ஏனமால் எனத்திருமால் சக்கரம் வேண்டிப் பூசித்த வரலாறும், பன்றி

யாக நிலத்தைக்கீண்ட வரலாறும் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளன.

திருநாவுக்கரசு நாயனுர் அருளிய பதிகம் மூன்றனுள் 'தேனைக்காவி' எனத் தொடங் கும் குறுந்தொகை ஒன்று. 7வது பாசுரம் **"ஒழுகு மாடத்துள் ஒன்பது வாய்தலும் கழுகரிப்பதன் முன்னம் கழலடி தொழுது கைகளால் தூமலர் தூவிநின்று அழும் அவர்க்கன்பன் ஆனைக்கா அண்ணலே"** என ஒன்பான் வாயில் உடம்பைக் கழுகு அரிப் பதன் முன் இறைவனைத் தொழுது மலர் தூவி அழுபவர்க்கு அவன் அன்பன்என்று போற்றி யிருப்பது படித்து இன்புறத்தக்கது. மற்ற இரண்டுந் திருத்தாண்டகங்கள். ஒன்று 'அல்ல கண்டங் கொண்டடியேன் என் செய்கேனே', என்னும் மகுடத்தையும் மற்றது 'செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே' என்னும் மகுடத்தையும் உடையது.

சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது பண் காந்தாரம் 'மறைகளாயின' எனத்தொடங்கும் பதிகம் ஒன்றே. அதனில் 7வது பாசுரத்தில் உறையூர்ச்சோழன் நீராடியபோது முத்தாரம் ஆற்றில் நழுவி விழுந்ததைஅறிந்து நின்மலா கொள்க என வேண்ட, திருமஞ்சனக்குடத்தில் அந்த ஆரம்புகுந்து இறைவனை நீராட்டிய போது அவ்இறைவனுக்கு அணியாயவரலாறு போற்றபெற்றுள்ளது. இஃதன்றியும் திருவாவடுதுறைப்பதிகத்தில் செங்கணான் பிறப்பினைச் சிறப்பித்து "தெருண்ட வாயிடை நூல் கொண்டு சிலந்தி சித்திரப் பந்தர் சிக்கென இயற்றச், சுருண்ட செஞ்சடையாய் அது தன்னைச் சோழனாக்கிய தொடர்ச்சிகண்டடியேன், புரண்டு வீழ்ந்து நின் பொன்மலர்ப் பாதம் போற்றி போற்றி என்றன்பொடு புலம்பி; அருண்டென்மேல் வினைக்கஞ்சி வந்தடைந்தேன் ஆவடுதுறை ஆதிஎம்மானே" எனப்போற்றி யருளியிருக்கின்றனர்.

உ

# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகங்கள்

## 1. பண் - இந்தளம்

இராகம்: நாதநாமக்கிரியை.] [தாளம்: சாபு.

*திருச்சிற்றம்பலம்*

*மழையார் மிடறா மழுவா ளுடையாய்*
*உழையார் கரவா வுமையாள் கணவா*
*விழவா ரும்வெணு வலின்மே வியவெம்*
*அழகா வெனுமா யிழையா ளவளே.* 1

கொலையார் கரியின் னுரிமூ டியனே
மலையார் சிலையா வளைவித் தவனே
விலையா லெனையா ளும்வெண்ணா வலுளாய்
நிலையா வருளா யெனுமே ரிழையே. 2

காலா லுயிர்கா லனைவீ டுசெய்தாய்
பாலோ டுநெய்யா டியபால் வணனே
வேலா டுகையா யெம்வெண்ணா வலுளாய்
ஆலார் நிழலா யெனுமா யிழையே. 3

சுறவக் கொடிகொண் டவனீ றதுவாய்
உறநெற் றிவிழித் தவெமுத் தமனே
விறன்மிக் ககரிக் கருள்செய் தவனே
அறமிக் கதுவென் னுமெனா யிழையே. 4

செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா யவனே
வெங்கண் விடையா யெம்வெண்ணா வலுளாய்
அங்கத் தயர்வா யினளா யிழையே. 5

குன்றே யமர்வாய் கொலையார் புலியின்
தன்றோ லுடையாய் சடையாய் பிறையாய்
வென்றாய் புரமூன் றைவெண்ணா வலுளே
நின்றா யருளா யெனுநே ரிழையே. 6

* * * * 7

மலையன் றெடுத்த வரக்கன் முடிதோள்
தொலையவ் விரலூன் றியதூ மழுவா
விலையா லெனையா ளும்வெண்ணா வலுளாய்
அலசா மனல்கா யெனுமா யிழையே. 8

திருவார் தருநா ரணனான் முகனும்
மருவா வெருவா வழலாய் நிமிர்ந்தாய்
விரையா ரும்வெண்ணா வலுண்மே வியவெம்
அரவா வெனுமா யிழையா ளவளே. 9

புத்தர் பலரோ டமண்பொய்த் தவர்கள்
ஒத்தவ் வுரைசொல் லிவையோ ரகிலார்
மெய்த்தே வர்வணங் கும்வெண்ணா வலுளாய்
அத்தா வருளா யெனுமா யிழையே. 10



வெண்ணா வலமர்ந் துறைவே தியனைக்
கண்ணார் கமழ்கா ழியர்தந் தலைவன்
பண்ணா டிவைபா டியபத் தும்வல்லார்
விண்ணோ ரவரேத் தவிரும் புவரே. 11

திருச்சிற்றம்பலம்.

## 2· திருவிராகம். பண் - கௌசிகம்.

இராகம்: பயிரவி.] [தாளம்: ரூபகம்.

திருச்சிற்றம்பலம்

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவி லின்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவி லண்ணலை யபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதுமேத மில்லையே. 1

சேறுபட்ட தண்வயற் சென்றுசென்று சேணுலா
வாறுபட்ட நுண்டுறை யானைக்காவி லண்ணலார்
நீறுபட்ட மேனியார் நிகரில்பாத மேத்துவார்
வேறுபட்ட சிந்தையார் விண்ணிலெண்ண வல்லரே. 2

தாரமாய மாதரா டானொர்பாக மாயினான்
ஈரமாய புன்சடை யேற்றதிங்கள் சூடினான்
ஆரமாய மார்புடை யானைக்காவி லண்ணலை
வாரமாய் வணங்குவார் வல்வினைகண் மாயுமே. 3

விண்ணினண்ணு புல்கிய வீரமாய மால்விடைச்
சுண்ணவெண்ணீ றாடினான் சூலமேந்து கையினான்
அண்ணல்கண்ணொர் மூன்றினா னானைக்காவு கைதொழ
எண்ணும்வண்ணம் வல்லவர்க் கேதமொன்று மில்லையே. 4

வெய்யபாவங் கைவிட வேண்டுவீர்க ளாண்டசீர்
மைகொள்கண்டன் வெய்யதீ மாலையாடு காதலான்
கொய்யவிண்ட நாண்மலர்க் கொன்றைதுன்று சென்னியெம்
ஐயன்மேய பொய்கைசூ ழானைக்காவு சேர்மினே. 5

நாணுமோர்வு சார்வுமுன் னகையுமுட்கு நன்மையும்
பேணுறாத செல்வமும் பேசநின்ற பெற்றியான்
ஆணும்பெண்ணு மாகிய வானைக்காவி லண்ணலார்
காணுங்கண்ணு மூன்றுடைக் கறைகொண்மிடற னல்லனே 6

கூருமாலை நண்பகற் கூடிவல்ல தொண்டர்கள்
பேருமூருஞ் செல்வமும் பேசநின்ற பெற்றியான்
பாரும்விண்ணுங் கைதொழப் பாயுங்கங்கை செஞ்சடை
ஆரநீரோ டேந்தினா னானைக்காவு சேர்மினே. 7

பொன்னமல்கு தாமரைப் போதுதாது வண்டினம்
அன்னமல்கு தண்டுறை யானைக்காவி லண்ணலை
பன்னவல்ல நான்மறை பாடவல்ல தன்மையோர்
முன்னவல்லர் மொய்கழல் துன்னவல்லர் விண்ணையே. 8

ஊனொடுண்ட னன்றென வூனொடுண்ட றீதென
ஆனதொண்ட ரன்பினாற் பேசநின்ற தன்மையான்
வானொடொன்று சூடினான் வாய்மையாக மன்னிநின்
றானொடஞ்சு மாடினா னானைக்காவு சேர்மினே. 9

கையிலுண் ணுங் கையருங் கடுக்கடின் கழுக்களும்
மெய்யைப்போர்க்கும் பொய்யரும் வேதநெறியை யறிகிலார்
தையல்பாக மாயினான் தலழலதுருவத் தானெங்கள்
ஐயன்மேய பொய்கைசூ ழானைக்காவு சேர்மினே. 10

ஊழியூழி வையகத் துயிர்கடோற்று வானொடும்
ஆழியானுங் காண்கிலா வானைக்காவி லண்ணலைக்
காழிஞான சம்பந்தன் கருதிச்சொன்ன பத்திவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகள் மாயுமே. 11

திருச்சிற்றம்பலம்.

## 3. கூடற் சதுக்கம். பண் - பழம்பஞ்சுரம்

இராகம்: சங்கராபரணம்.] [தாளம்: சாபு.

திருச்சிற்றம்பலம்

மண்ணது வுண்டரி மலரோன்காணா
வெண்ணாவல் விரும்புமயேந்திரரும்
கண்ணது வோங்கிய கயிலையாரும்
அண்ணலா ரூராதி யானைக்காவே. 1

வந்துமா லயனவர் காண்பரியார்
வெந்தவெண் ணீறணி மயேந்திரரும்
கந்தவார் சடையுடைக் கயிலையாரும்
அந்தணா ரூராதி யானைக்காவே. 2

மாலயன் தேடிய மயேந்திரரும்
காலனை யுயிர்கொண்ட கயிலையாரும்
வேலைய தோங்கும்வெண் ணாவலாரும்
ஆலையா ரூராதி யானைக்காவே. 3

கருடனை யேறரி யயனோர்காணார்
வெருள்விடை யேறிய மயேந்திரரும்
கருடரு கண்டத்தெங் கயிலையாரும்
அருளணா ரூராதி யானைக்காவே. 4

மதிசூதன னான்முகன் வணங்கரியார்
மதியது சொல்லிய மயேந்திரரும்
கதிர்முலை புல்கிய கயிலையாரும்
அதியனா ரூராதி யானைக்காவே. 5

சக்கரம் வேண்டுமால் பிரமன்காணு
மிக்கவர் கயிலை மயேந்திரரும்
தக்கனைத் தலையரி தழலுருவர்
அக்கணி யவராரூ ரானைக்காவே. 6

கண்ணனு நான்முகன் காண்பரியார்
வெண்ணுவல் விரும்பு மயேந்திரரும்
கண்ணப்பர்க் கருள்செய்த கயிலையெங்கள்
அண்ணலா ரூராதி யானைக்காவே. 7

கடல்வண்ண னுன்முகன் காண்பரியார்
தடவரை யரக்கனைத் தலைநெரித்தார்
விடமது வுண்டவெம் மயேந்திரரும்
அடல்விடையா ரூராதி யானைக்காவே. 8

ஆதிமா லயனவர் காண்பரியார்
வேதங்க டுதிசெயு மயேந்திரரும்
காதிலோர் குழையுடைக் கயிலையாரும்
ஆதியா ரூரெந்தை யானைக்காவே. 9

அறிவி லமண்புத்த ரறிவுகொள்ளேல்
வெறியமான் கரத்தாரூர் மயேந்திரரும்
மறிகட லோனயன் றேடத்தானும்
அறிவரு கயிலையோ னானைக்காவே. 10

ஏனமா லயனவர் காண்பரியார்
கானமார் கயிலைநன் மயேந்திரரும்
ஆனவா ரூராதி யானைக்காவை
ஞானசம் பந்தன் றமிழ்சொல்லுமே. 11

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்

## 4. திருக்குறுந்தொகை

இராகம்: நாதநாமக்கிரியை.] [தாளம்: சாபு.

*திருச்சிற்றம்பலம்*

*கோனைக் காவிக் குளிர்ந்த மனத்தராய்த்*
*தேனைக் காவியுண் ணார்சில தெண்ணர்கள்*
*ஆனைக் காவிலெம் மானை யணைகிலார்*
*ஊனைக் காவி உழிதர்வ ரூமரே.* 1

திருகு சிந்தையைத் தீர்த்துச்செம் மைசெய்து
பருகி யூறலைப் பற்றிப் பதமறிந்
துருகி நைபவர்க் கூனமொன் றின்றியே
அருகு நின்றிடு மானைக்கா வண்ணலே. 2

துன்ப மின்றித் துயரின்றி என்றுநீர்
இன்பம் வேண்டி லிராப்பக லேத்துமின்
என்பொ னீச னிறைவனென் றுள்குவார்க்
கன்ப னாயிடு மானைக்கா வண்ணலே. 3

நாவா னன்று நறுமலர்ச் சேவடி
ஓவா தேத்தி உளத்தடைத் தார்வினை
காவா யென்று தங் கைதொழு வார்க்கெலாம்
ஆவா வென்றிடு மானைக்கா வண்ணலே. 4

வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடற
நைஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெலாம்
அஞ்ச லென்றிடு மானைக்கா வண்ணலே. 5

நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்
தடையொன் றின்றியே தன்னடைந் தார்க்கெலாம்
அடைய நின்றிடு மானைக்கா வண்ணலே. 6

ஒழுகு மாடத்து ளொன்பது வாய்தலும்
கழுக ரிப்பதன் முன்னங் கழலடி
தொழுது கைகளாற் றூமலர் தூவிநின்
றழும வர்க்கன்ப னானைக்கா வண்ணலே. 7

உருளும் போதறி வொண்ணு வுலகத்தீர்
தெருளுஞ் சிக்கெனத் தீவினை சேராதே
இருள றுத்துநின் றீசனென் பார்க்கெலாம்
அருள்கொ டுத்திடு மானைக்கா வண்ணலே. 8

நேச மாகி நினைமட நெஞ்சமே
நாச மாய குலநலஞ் சுற்றங்கள்
பாச மற்றுப் பராபர வானந்த
ஆசையுற்றிடு மானைக்கா வண்ணலே. 9

ஓத மாகடல் சூழிலங் கைக்கிறை
கீதங் கின்னரம் பாடக் கெழுவினன்
பாதம் வாங்கிப் பரிந்தருள் செய்தங்கோர்
ஆதி யாயிடு மானைக்கா வண்ணலே. 10

திருச்சிற்றம்பலம்.

## 5. திருத்தாண்டகம்

**இராகம்: அரிகாம்போதி.**

திருச்சிற்றம்பலம்

எத்தாய ரெத்தந்தை யெச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடா மேவர் நல்லார்
செத்தால்வந் துதவுவா ரொருவ ரில்லை
சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா வென்றன்
அத்தாவுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 1

ஊனாகி யுயிராகி யதனுள் நின்ற
    உணர்வாகிப் பிறவனைத்து நீயாய் நின்றாய்
நானேது மறியாமே யென்னுள் வந்து
    நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
    திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாத மடையப் பெற்றால்
    அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 2

ஒப்பாயிவ் வுலகத்தோ டொட்டி வாழ்வான்
    ஒன்றலாத் தவத்தாரோ டுடனே நின்று
துப்பாருங் குறையடிசில் துற்றி நற்றுன்
    றிறமறந்து திரிவேனைக் காத்து நீவந்

தெப்பானு நுன்னுணர்வே யாக்கி யென்னை
யாண்டவனே யெழிலானைக் காவா வானோர்
அப்பாவுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 3

நினைத்தவர்க ணெஞ்சுளாய் வஞ்சக் கள்வா
நிறைமதியஞ் சடைவைத்தா யடையா துன்பால்
முனைத்தவர்கள் புரமூன்று மெரியச் செற்றாய்
முன்னானைத் தோல்போர்த்த முதல்வா வென்றும்
கனைத்துவரு மெருதேறுங் காளகண்டா
கயிலாய மலையாயுன் கழலே சேர்ந்தேன்
அனைத்துலகு மாள்வானே யானைக் காவா
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 4

இம்மாயப் பிறப்பென்னுங் கடலாந் துன்பத்
திடைச்சுழிப்பட் டிளைப்பேனை யிளையா வண்ணம்
கைம்மான மனத்துதவிக் கருணை செய்து
காதலரு ளவைவைத்தாய் காண நில்லாய்
வெம்மான மதகரியி னுரிவை போர்த்த
வேதியனே தென்னானைக் காவுண் மேய
அம்மானின் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 5

உரையாரும் புகழானே யொற்றி யூராய்
கச்சியே கம்பனே காரோ ணத்தாய்
விரையாரு மலர்தூவி வணங்கு வார்பால்
மிக்கானே யக்கரவ மாரம் பூண்டாய்

திரையாரும் புனற்பொன்னித் தீர்த்த மல்கு
திருவானைக் காவிலுறை தேனே வானோர்
அரையாவுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 6

மையாரு மணிமிடற்றாய் மாதோர் கூறாய்
மான்மறியு மாமழுவு மனலு மேந்தும்
கையானே காலனுடன் மாளச் செற்ற
கங்காளா முன்கோளும் விளைவு மானாய்
செய்யானே திருமேனி யரியாய் தேவர்
குலக்கொழுந்தே தென்னானைக் காவுண் மேய
ஐயாவுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 7

இலையாருஞ் சூலத்தா யெண்டோ ளானே
எவ்விடத்து நீயல்லா தில்லை யென்று
தலையாரக் கும்பிடுவார் தன்மை யானே
தழன்மடுத்த மாமேருக் கையில் வைத்த
சிலையானே திருவானைக் காவுண் மேய
தீயாடீ சிறுநோயா னலிவுண் டுள்ளம்
அலையாதே நின்னடியே யடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 8

விண்ணாரும் புனல்பொதிசெஞ் சடையாய் வேத
நெறியானே யெறிகடலி னஞ்ச முண்டாய்
எண்ணாரும் புகழானே யுன்னை யெம்மான்
என்றென்றே நாவினிலெப் பொழுது முன்னிக்

கண்ணாரக் கண்டிருக்கக் களித்தெப் போதும்
கடிபொழில்சூழ் தென்னானைக் காவுண் மேய
அண்ணாநின் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 9

கொடியேயும் வெள்ளேற்றாய் கூளி பாடக்
குறட்பூதங் கூத்தாட நீயு மாடி
வடிவேயு மங்கைதனை வைத்த மைந்தா
மதிலானைக் காவுளாய் மாகா ளத்தாய்
படியேயுங் கடலிலங்கைக் கோமான் றன்னைப்
பருமுடியுந் திரடோளு மடர்த்து கந்த
அடியேவந் தடைந்தடிமை யாகப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே. 10

திருச்சிற்றம்பலம்.

## 6. திருச்சிற்றம்பலம்

முன்னனைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன்னனை யாப்பண்ணி யேறி னனைச்
சார்தற் கரியானைத் தாதை தன்னை
என்னனைக் கன்றினையென் னீசன் றன்னை
யெறிநீர்த் திரையுகளுங் காவி ரிசூழ்
தென்னனைக் காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 1

மருந்தானை மந்திரிப்பார் மனத்து ளானை
வளர்மதியஞ் சடையானை மகிழ்ந்தெ னுள்ளத்
திருந்தானை யிறப்பிலியைப் பிறப்பி லானை
இமையவர்தம் பெருமானை யுமையா ளஞ்சக்

கருந்தான மதகளிற்றி னுரிபோர்த் தானைக்
கனமழுவாட் படையானைப் பலிகொண் டூர்
திரிந்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 2

முற்றாத வெண்டிங்கட் கண்ணி யானை
முந்நீர்நஞ் சுண்டிமையோர்க் கமுத நல்கும்
உற்றானைப் பல்லுயிர்க்குந் துணையா னானை
யோங்காரத் துட்பொருளை யுலக மெல்லாம்
பெற்றானைப் பின்னிரக்கஞ் செய்வான் றன்னைப்
பிரானென்று போற்றாதார் புரங்கண் மூன்றும்
செற்றானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 3

காராருங் கறைமிடற்றெம் பெருமான் றன்னைக்
காதில்வெண் குழையானைக் கமழ்பூங் கொன்றைத்
தாரானைப் புலியதளி னுடை யானைத்
தானன்றி வேறொன்று மில்லா ஞானப்
பேரானை மணியார மார்பி னானைப்
பிஞ்ஞகனைத் தெய்வநான் மறைகள் பூண்ட
தேரானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 4

பொய்யேது மில்லாத மெய்யன் றன்னைப்
புண்ணியனை நண்ணாதார் புரநீ றாக
எய்தானைச் செய்தவத்தின் மிக்கான் றன்னை
யேறமரும் பெருமானை யிடமா னேந்தும்

கையானைக் கங்காள வேடத் தானைக்
கட்டங்கக் கொடியானைக் கனல்போன் மேனிச்
செய்யானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 5

கலையானைப் பரசுதர பாணி யானைக்
கனவயிரத் திரளானை மணிமா ணிக்க
மலையானை யென்றலையி னுச்சி யானை
வார்தருபுன் சடையானை மயான மன்னும்
நிலையானை வரியரவு நாணுக் கோத்து
நினையாதார் புரமெரிய வளைத்த மேருச்
சிலையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 6

ஆதியனை யெறிமணியி னோசை யானை
யண்டத்தார்க் கறிவொண்ணா தப்பான் மிக்க
சோதியனைத் தூமறையின் பொருளான் றன்னைச்
சுரும்பமரு மலர்க்கொன்றைத் தொன்னூல் பூண்ட
வேதியனை யறமுரைத்த பட்டன் றன்னை
விளங்குமல ரயன்சிரங்க ளைந்தி லொன்றைச்
சேதியனைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 7

மகிழ்ந்தானைக் கச்சியே கம்பன் றன்னை
மறவாது கழனினைந்து வாழ்த்தி யேத்திப்
புகழ்ந்தாரைப் பொன்னுலக மாள்விப் பானைப்
பூதகணப் படையானைப் புறங்காட் டாடல்

உகந்தானைப் பிச்சையே யிச்சிப் பானை
யொண்பவளத் திரளையென் னுள்ளத் துள்ளே
திகழ்ந்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 8

நசையானை நால்வேதத் தப்பா லானை
நல்குரவுந் தீப்பிணிநோய் காப்பான் றன்னை
இசையானை யெண்ணிறந்த குணத்தான் றன்னை
யிடைமருது மீங்கோயு நீங்கா தேற்றின்
மிசையானை விரிகடலு மண்ணும் விண்ணு
மிகுதீயும் புனலெறிகாற் றாகி யெட்டுத்
திசையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 9

பார்த்தானைக் காமனுடல் பொடியாய் வீழப்
பண்டயன்மா லிருவர்க்கு மறியா வண்ணம்
சீர்த்தானைச் செந்தழல்போ லுருவி னானைத்
தேவர்கடம் பெருமானைத் திறமுன் னாதே
ஆர்த்தோடி மலையெடுத்த விலங்கை வேந்தன்
ஆண்மையெல்லாங் கெடுத்தவன்ற னிடரப் போதே
தீர்த்தானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே. 10

திருச்சிற்றம்பலம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்.

## 7. பண் - காந்தாரம்

இராகம்: **நவரோஸ்.**] [தாளம்: **ஆதி.**

திருச்சிற்றம்பலம்

மறைக ளாயின நான்கு மற்றுள பொருள்களு மெல்லாந்
துறையுந் தோத்திரத்திறையும் தொன்மையு நன்மையு மாய
அறையும் பூம்புன லானைக் காவுடை யாதியை நாளும்
இறைவ னென்றடி சேர்வா ரெம்மையு மாளுடையாரே. 1

வங்க மேவிய வேலை நஞ்செழ வஞ்சர்கள் கூடித்
தங்கண் மேலட ராமை யுண்ணென வுண்டருள் கண்டன்
அங்க மோதிய ஆனைக் காவுடை யாதியை நாளும்
எங்களீசனென் பார்கள் எம்மையு மாளுடை யாரே. 2

நீல வண்டறை கொன்றை நேரிழை மங்கையோர் திங்கள்
சால வாளர வங்கள் தங்கிய செஞ்சடை யெந்தை
ஆல நீழலு ளானைக் காவுடை யாதியை நாளும்
ஏலு மாறுவல் லார்கள் எம்மையு மாளுடை யாரே. 3

தந்தை தாயுல குக்கோர் தத்துவன் மெய்த்தவத் தோர்க்குப்
பந்த மாயின பெருமான் பரிசுடை யவர்திரு வடிகள்
அந்தண் பூம்புன லானைக் காவுடை யாதியை நாளும்
எந்தை யென்றடி சேர்வா ரெம்மையு மாளுடை யாரே. 4

கணைசெந் தீயர வந்நாண் கல்வளை யுஞ்சிலை யாகத்
துணைசெய் மும்மதின் மூன்றுஞ் சுட்டவ னேயுல குய்ய
அணையும் பூம்புன லானைக் காவுடை யாதியை நாளும்
இணைகொள் சேவடி சேர்வா ரெம்மையு மாளுடை யாரே. 5

விண்ணின் மாமதி சூடி விலையிலி கலனணி விமலன்
பண்ணி னேர்மொழி மங்கை பங்கினன் பசுவுகந் தேறி
அண்ண லாகிய ஆனைக் காவுடை யாதியை நாளும்
எண்ணு மாறுவல் லார்கள் எம்மையு மாளுடை யாரே. 6

தார மாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுத்தும்
நீரி னின்றடி போற்றி நின்மலா கொள்ளென ஆங்கே
ஆரங் கொண்டவெம் மானைக் காவுடை யாதியை நாளும்
ஈர முள்ளவர் நாளும் எம்மையு மாளுடை யாரே. 7

உரவ முள்ளதோ ருழையின் உரிபுலி யதளுடை யானை
விரைகொள் கொன்றையி னானை விரிசடை மேற்பிறை யானை
அரவம் வீக்கிய ஆனைக் காவுடை யாதியை நாளும்
இரவு மெல்லியும் பகலு மேத்துவா ரெமையுடை யாரே. 8

வலங்கொள் வாரவர் தங்கள் வல்வினை தீர்க்கு மருந்து
கலங்கக் காலனைக் காலாற் காமனைக் கண்சிவப் பானை
அலங்கல் நீர்பொரு மானைக் காவுடை யாதியை நாளும்
இலங்கு சேவடி சேர்வா ரெம்மையு மாளுடை யாரே. 9

ஆழி யாற்கரு ளானைக் காவுடை யாதிபொன் னடியின்
நீழ லேசர ணாக நின்றருள் கூர நினைந்து
வாழ வல்லவன் றொண்டன் வண்டமிழ் மாலைவல்லார்போய்
ஏழு மாபிறப் பற்று எம்மையு மாளுடை யாரே. 10

திருச்சிற்றம்பலம்

குழீஇயிருந்த சுற்றங் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த வங்கங்க ளெல்லாந்—தழீஇயிருந்தும்
என்னைக் காவா விதுதகா வென்னுமுன்
தென்னைக் காவடைநீ சென்று.

—ஐயடிகள் காடவர்கோன்.

விண்ணவர் போற்றிசெய் யானைக்காவில்
வெண்ணாவல் மேவிய மெய்ப்பொருளை
நண்ணி யிறைஞ்சிமுன் வீழ்ந்தெழுந்து
நாற்கோட்டு நாகம் பணிந்ததுவும்
அண்ணல் கோச்செங்கண் அரசன்செய்த
அடிமையும் அஞ்சொற் றொடையில்வைத்துப்
பண்ணுறு செந்தமிழ் மாலைபாடிப்
பரவிநின் றேத்தினர் பான்மையினால்.

நாரணன் நான்முகன் காணா உண்மை
வெண்ணாவல் உண்மை மயேந்திரமும்
சீரணி நீடுந் திருக்கயிலை
செல்வத் திருவாரூர் மேயபண்பும்
ஆரணத் துட்பொரு ளாயினானை
ஆனைக்கா வின்கட் புகழ்ந்துபாடி
ஏரணியும்பொழில் சூழ்ந்த சண்பை
ஏந்தலார் எல்லையில் இன்பமுற்றார்.

அப்பூங் காவில் வெண்ணாவல்
அதன்கீழ் முன்னாள் அரிதேடும்
மெய்ப்பூங் கழலார் வெளிப்படலும்
மிக்க தவத்தோர் வெள்ளானை
கைப்பூம் புனலும் முகந்தாட்டிக்,
கமழ்பூங் கொத்தும் அணிந்திறைஞ்சி
மைப்பூங் குவளைக் களத்தாரை
நாளும் வழிபட் டொழுகுமால்.

ஆன செயலால் திருவானைக்
காஎன் றதற்குப் பெயராக
ஞான முடைய ஒருசிலந்தி
நம்பர் செம்பொன் திருமுடிமேல்
கானல் விரவுஞ் சருகுதிரா
வண்ணங் கலந்த வாய்நூலால்
மேனற் றிருமேற் கட்டியென
விரிந்து செறியப் புரிந்துளதால்.

ஆனைக் காவில் தாமுன்னம்
அருள்பெற் றதனை அறிந்தங்கு
மானைத் தரித்த திருக்கரத்தார்
மகிழுங் கோயில் செய்கின்றார்

ஞானச் சார்வாம் வெண்ணாவ
லுடனே கூட நலஞ்சிறக்கப்
பானற் களத்துத் தம்பெருமான்
அமருங் கோயில் பணிசமைத்தார்.

**—சேக்கிழார் சுவாமிகள்.**

அம்புலி நீரைச் சூடிய
செஞ்சடை மீதிற் றூவிய
ஐந்தலை நாகப் பூஷணை னருள்வோனே
யன்புட னவிற் பாவது
சந்தத மோதித் தாடனி
லங்கையி னனற் பூசனை புரியாமல்
அம்பணி யாரப் பூண்முலை
வஞ்சியர் மாயச் சாயலில்
வண்டுழ லோதித் தாழ்குழ லிருகாதின்

மண்டிய நீலப் பார்வையில்
வெண்டுகி லாடைச் சேர்வையின்
மங்கிய வேழைப் பாவிய ணழிவேனோ

கொம்பனை நீலக் கோமள
வம்புய மாலைப் பூஷணி
குண்டலி யாலப் போசனி யபிராமி

கொஞ்சிய வானைச் சானவி
சங்கரி வேதப் பார்வதி
குன்றருள் பாலிப் பேரிழை யருள்பாலா

செம்பவ ளாயக் கூரிதழ்
மின்குற மானைப் பூண்முலை
திண்புய மார்பிற் பூரண மணவோனே

செந்தமிழ் வாணப் பாவலர்
சங்கிசை யாழைப் பாடிய
தென்றிரு வானைக் காவுறை பெருமாளே.

—அருணகிரிநாதர்.

வட்ட மிட்டொளிர் பிராண வாயுவெனு
        நிகள மோடுகம னஞ்செயும்
    மனமெனும் பெரிய மத்த யானையையென்
        வசம டக்கி டின்மும் மண்டலத்
திட்ட முற்றவள ராச யோகமிவன்
        யோக மென்றறிஞர் புகழவே
    ஏழையே னுலகில் நீடு வாழ்வன்இனி
        இங்கிதற் கும்அனு மானமோ
பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
        பாக்ய மானசுப யோகமும்
    பார காவிய கவித்வ நான்மறை
        பராயணஞ் செய்மதி யூகமும்
அட்டசித்தியு நலன்ப ருக்கருள
        விருது கட்டிய பொன் அன்னமே

அண்டகோடி புகழ் காவை வாழும் அகி
லாண்ட நாயகியென் அம்மையே.

—தாயுமானசுவாமிகள்.

உலகிடை யழுத பிள்ளைபால் குடிக்கு
முண்மையென் றுரைப்பதற் கேற்ப
இலகுசீ காழி மழவழ வளித்தா
யின்முலைப் பாலழா விடினும்
அலகற விரங்கி யளிப்பவ ரிலையோ
அத்தகு மழவியா னருள்வாய்
கலகமில் கழகஞ் சூழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே.

—மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

## விநாயகர்

நிலம்போற்றும் பணிக்கிரண நிலாவணிந்த நாயகனார்
நிருதர் வாழுஞ்
சலம்போற்று மதில்பொடித்த ஞான்றினிய பூசனைகள்
சால வாற்றிப்
புலம்போற்று மெய்யடியார் விநாயகனென் றியம்புபதப்
பொருளை நாட்டி
வலம்போற்று மணியிரத மூர்ந்தமழ விளங்களிற்றை
வணங்கஞ் செய்வாம்.

—கச்சியப்ப முனிவர்.